## முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.

அசல் வழக்கு எண். 13/2021

நாள் : 23.01.2023

பி.வா.சா.2 திரு சைபூர் ரஹ்மான் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வாதி, பிரதிவாதிகள் எனக்கு நெருங்கிய உறவினர்கள். வாதி சலிமுல்லா மலேசியா நாட்டில் இருந்தார். அவரது தாயாரின் மறைவிற்கு பின்னர்தான் வாதி இந்தியாவிற்கு வந்தார். வாதியின் தாயார் இறப்பதற்கு முன்னால் வாதி, அவரது தாயார், வாதியின் சகோதரி அனைவரும் ஒரே குடும்பமாக இருந்தார்கள் என்றால் சரிதான். உயில் எழுதுவதற்கு ரசீனாபீவிதான் பத்திரம் வாங்கினார். எவ்வளவு ரூபாய்க்கு பத்திரம் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. ரசீனாபீவி கூற நடராஜ் என்பவர் டைப் செய்தார். நடராஜ் என்பவர் தேவகோட்டை பெட்ரோல் பங்க் லெட்சுமி தியேட்டர் அருகில் அவரது அலுவலம் உள்ளது அங்கு வைத்துதான் உயில் தயார் செய்யப்பட்டது. பிரதிவாதி அவரது தாயார், நான், அல்தாப் ஹுசேன் ஆகியோர்கள் அங்கு சென்றோம். வழக்கறிஞர் நடராஜனின் அலுவலகம் வடக்குபார்த்து உள்ளது. அந்த அலுவலகம் தேவகோட்டை–காரைக்குடி தேசிய நெடுஞ்சாலையில் உள்ளது. அவரது அலுவலகம் தனியாக உள்ளது. ரசீனாபீவியை இங்கிருந்து கார் வைத்துதான் அழைத்துச் சென்றோம். உயில் எழுதியபின்னர் 3 வருடங்கள் கழித்துத்தான் அவர் இறந்தார். உயிலை நான் படித்துப்பார்த்துள்ளேன் முதலாவது இலக்க சொத்தை பொறுத்து உயில் உள்ளது. அதன் சர்வே எண், விஸ்தீரணம் நினைவில்லை. அந்த சொத்து காலி இடமாகும். குலாம் மைதீன் என்பவரை எனக்கு தெரியும். குலாம் மைதீனும் அவரது மனைவியும் கணவன் மனைவியாகத்தான் வாழ்ந்தார்கள் என்று சொன்னால் வாதி சலிமுல்லா, குலாம்மைதீனின் மனைவியை திருமணம் செய்யும்வரை ஒன்றாகத்தான் வாழ்ந்தார்கள். நான் வெள்ளையாபுரம் என்ற கிராமத்தில்தான் குடியிருந்து

வருகிறேன். நான் 6, 7 வருடங்களுக்கு முன்பு ஜமாத் தலைவராக இருந்து வந்ததேன். சரபுநிஷாவின் தகப்பனார் சாகுல்ஹமீது என்பவரை எனக்கு தெரியும். 2002ம் ஆண்டு சைபுல்லா என்பவர் ஜமாத் தலைவராக இருந்தார். என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் உள்ள கையெழுத்துக்கள் யாருடையது என்று எனக்கு தெரியாது. சரபுநிஷாவிற்கும் அவரது கணவருக்கும் 14.07.2002 ல் ஜமாத்தில் முறைப்படி விவாகரத்து ஆகிவிட்டது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. ரசீனாபீவி அவரது மகளுக்கு ஒரு இனாம் செட்டில்மெண்ட் எழுதிவைத்தார் என்று சொன்னால் சரிதான். என்னிடம் தற்போது காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.8–ல் காணப்படுவது ரசீனாபீவியின் கையெழுத்து என்று சொன்னால் சரிதான். உயிலில் காணப்படும் ரசீனாபீவியின் கையொப்பமும், பி.வா.சா.ஆ.8 இனாம் செட்டில்மெண்ட்ல் காணப்படும் ரசீனாபீவியின் கையொப்பத்திலும் வேறுபாடு உள்ளது என்றால் தடுமாற்றமாற்றத்துடன் அவர் இருந்ததால் கையெழுத்து சற்று வித்தியாசமாக உள்ளது. காலை 11.00 மணியளவில் வழக்கறிஞர் நடராஜனின் அலுவலகத்தில் வைத்து கையொப்பம் செய்தோம். நான் கூறியவாறு ரசீனாபீவி தாமாக உயில் எழுதித்தரவில்லை என்றும் நானும் அல்தாப் உசேனும் மேற்படி உயிலை தயார் செய்தோம் என்றால் சரியல்ல. ரசீனாபீவிக்கும், பிரதிவாதிக்கும் படிப்பறிவு இல்லை என்பதை பயன்படுத்தி நாங்களாக உயிலை உற்பத்தி செய்தோம் என்றால் சரியல்ல. பொதுவாக எங்கள் சமூகத்தில் விவாகரத்து ஆன மனைவியை மீண்டும் முதல் கணவர் திருமணம் செய்ய வேண்டுமென்றால் விவாகரத்து ஆன மனைவிக்கு வேறு ஒரு திருமணம் நடந்து அதிலிருநது விவாகரத்து ஆன பின்னர்தான் மீண்டும் முதல் கணவரை திருமணம் செய்ய முடியும் என்றால் சரிதான். இஸ்லாமிய சட்டப்படி உயில் செல்லாது என்றால் எங்கள் சமூகத்தில் உயில் எழுதும் வழக்கம் உள்ளது. இஸ்லாமிய சட்டப்படி உயில் செல்லாது என்று தெரிந்தும் இந்த வழக்கு உயிலை போலியாக உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 3வது இலக்க சொத்தில் எனது தகப்பனார், வாதியின் தகப்பனாருக்கு பாகம் உள்ளது. இன்றுவரை கூட்டுபட்டாவாக

உள்ளது என்று சொன்னால் எங்கள் பாகத்தை பொருத்து தனிப்பட்டா பெற்றுவிட்டோம். 3 வது இலக்க சொத்து ரசீனாபீவிக்கு பாத்தியம் இல்லை என்று சொன்னால் சரிதான். ஆனால் கணவர் வழியாக அவருக்கு பாத்தியம் வருகிறது. இஸ்லாமிய சட்டப்படி ஆண்களுக்கு 2 பாகமும், பெண்களுக்கு 1 பாகமுமாக சொத்துக்கள் பிரிக்கப்படும்.

ம.வி. இல்லை.

ஒப்பம்/ஜி. விஜயா,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்